# குலசேகராழ்வார்

பூ. அ. பாஷ்யம் ஐயங்கார், பி. ஏ, எல். டி.
எழுதியது

15

சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 2 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

# பொருளடக்கம்


| இலக்கம் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | திருவவதாரம் - - - | 5 |
| 2. | அரசுரிமை பெறுதல் - . - | 7 |
| 3. | ஆழ்வாரின் விரக்தி நிலை - - | 12 |
| 4. | ராமாயண ஈடுபாடு - - - - - | 13 |
| 5. | பாகவதபக்தி - - - - - | 17 |
| 6. | அமைச்சரின் சூழ்ச்சி - - - - - | 20 |
| 7. | பாம்புக் குடத்திற் கையிட்டுப் பாகவதர் மஹிமையை அறிவித்தல் - - - | 22 |
| 8. | ஸ்தல யாத்ரையும் பரமபத ப்ராப்தியும் | 25 |



குலசேகரர்க்கு ஸ்ரீராமபிரான் காட்சிகொடுத்தல் 17-வது பக்கம்

ஸ்ரீ

# குலசேகராழ்வார்

## 1. திருவவதாரம்

சேரநாட்டில் த்ருடவ்ரதன் என்னும் அரசன் திருவஞ்சிக்களம் என்னும் நகரை ஆண்டுவந்தான். அவன் தன் குடிகளிடத்தில் அன்பு பூண்டு எல்லா உயிர்களையும் காத்துவந்தான். அவன் தன் செல்வத்தாலும் சௌர்யத்தாலும் புகழ் அடைந்து யாவராலுங் கொண்டாடப் பட்டான். ஆயினும் அவ்வரசனுக்கு வெகுநாள்வரை புத்ரபாக்யம் இல்லாதிருந்தது. அதனால் தனக்குப்பின் அரசுரிமை பெறுவதற்கு ஒருவருமில்லையே என்று அந்த அரசன் வருந்தினன். ஒருவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றும் மகப்பேறு இல்லாதிருப்பின், அது பெருங்குறையே அன்றோ? ஒருவன் பொன் படைத்திருந்தாலென்ன? புகழ் அடைந்திருந்தாலென்ன? மக்களைப்பெற்று அவர்களை வாரியெடுத்து அணைத்து அவர் மழலை வார்த்தைகளைக்கேட்டுக் களிப்பதைப்போல் இன்பம் விளைப்பது வேறுண்டோ? ஆதலால், மன்னனும் தனக்கு ஒரு புத்ரனை அளிக்கும்படி மஹாவிஷ்ணுவை ஆராதித்து வந்தான். அநேக ஸத்ரங்கள் கட்டிப் பலவகைத் தர்மங்கள் புரிந்துவந்தான். அவன் தன் பத்னியோடு பல நோன்புகள் இயற்றி அரிய வ்ரதங்களை அநுஷ்டித்துவந்தான். முடிவில் பகவான் அவனிடம் திருவுளம் இரங்கினர். பக்தர்களின் குறை

களை அறிந்து அவரவர் வேண்டுவனவற்றை அளிக்கும் பரமனன்றோ அவர்? அவரது அருளால் அரசன் மனைவி கருத்தரித்துப் பத்துமாதங் கழிந்தபின் ஓர் அழகிய புதல்வனைப் பெற்றாள்.

மகன் பிறந்தானென்று அரசனுக்கு அறிவித்தனர். இச்சுபசெய்தியைக்கேட்ட அரசன் மிகவும் ஸந்தோஷமடைந்தான். உடனே நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் அர்ச்சனைகளும் பூஜைகளும் சிறப்புடன் நடத்தும்படி கட்டளையிட்டான்.

அந்தணர்க்கும், யாசகர்க்கும் ஏராளமான த்ரவ்யம் வழங்கினான். ஏழைகளுக்கும் அங்கஹீனர்க்கும் அன்னம் வழங்கினான். இங்ஙனம் அரசன் அநேகநாட்கள்வரை தன் நகரை அலங்கரித்துப் புத்ரோத்ஸவம்கொண்டாடினான். ஜோதிஷம்வல்ல பெரியோரை வரவழைத்து அரசன் தன் புதல்வனுடைய ஜாதகத்தைக் கணித்தான். அரசன் குலத்துக்கு அக்குழந்தை சிரோபூஷணம்போல் விளங்கிற்று. ஆகையால் பெரியோரைக்கொண்டு அம்மகவுக்குக் குலசேகரன் என்று பேரிட்டு அதை அருமையுடன் சீராட்டி வளர்த்துவந்தான். குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தன் பெற்றோரை மகிழ்வித்தது. குழந்தையின் ஸௌந்தர்யத்தையும் பாலலீலைகளையுங் கண்ட அரசனும் மனைவியும் மிகவும் களிப்புற்றனர்.

குலசேகரன் ஐந்து பிராயத்தை யடைந்ததும், த்ருடவ்ரதன் அப்பிள்ளைக்கு அக்ஷராப்யாசம் செய்வித்து அவனைப் பள்ளிக்கு அனுப்பினான். குலசேகரனும் சிறந்த குணவானென்றும் புத்திமானென்றும்

எல்லாரிடமும் பேரெடுத்து எல்லா நூல்களையும் கற்று மேன்மையுற்று விளங்கினான். அரசர் அவச்யம் கற்க வேண்டிய யுத்தமுறைகளையும், யானையேற்றம், குதிரை யேற்றம், தநுர்வித்தை முதலிய படைக்கலப் பயிற்சி யையும், அரசியல் வழிகளையும் குலசேகரன் தன் ஆசிரியரிடமிருந்து அறிந்து அவற்றில் வல்லவனானான். குலசேகரனுக்கு ஸமானமான பிள்ளைகள் ஒருவரும் அக்காலத்தில் இல்லை. அரசன் தனக்குற்ற பாக்யத்தை நினைத்து நினைத்து மனம் பூரித்தான். அவன் தன் குமாரனுடைய திறமையைக்கண்டு அதிசயித்தான். வித்தை முடிந்ததும் த்ருடவ்ரதன் தன் மகனை இளவரசனாக்கி அவனுக்கு முடிசூட்டினான்.

## 2. அரசுரிமை பெறுதல்

இளவரசுபட்டம் சூடியபின் குலசேகரன் நால்வகை ஸேனைகள் சூழப் புறப்பட்டுப் பகையரசர் மேல் படையெடுத்துச் சென்றான். அவன் தன் வலிமையால் பகைமன்னரை யுத்தத்தில் முறியடித்து வெற்றிபெற்றான். சோழமன்னனும் பாண்டிநாட்டு வேந்தனும் குலசேகரனுடைய ஸைந்யத்தோடு சண்டையிட முடியாமல் தோல்வியடைந்தார்கள். குலசேகரன் எதிரிகளுடைய நாடுகளைத் தன் வசப்படுத்தி அவற்றிற்குத் தலைவனானான். அதனால் அவனுக்குப் பல பட்டங்களுங் கிடைத்தன. அவனுடைய புகழும் நாடெங்கும் பரவிற்று. ப்ரஜைகளுக்கு அவனிடமிருந்த மதிப்பையும் அன்பையும் சொல்லி முடியாது.

புத்ரனுடைய பராக்ரமத்தையும் குடிகள் அவனிடம் காட்டிவந்த மர்யாதையையும் கண்டு

மன்னவன் அதிசயித்தான். அவன் தன் தவச்செல்வனை ஒருநாள் கொலுமண்டபத்திற்கு வரவழைத்தான். தன் தந்தையின் அடிகளில் பணிந்து நின்ற சலசேகரனை மன்னன் அன்புடன் நோக்கி, 'என் அருமை மகனே! எனக்கோ வயதாகிறது, இதுவரை ராஜ்ய பாரத்தை வஹித்துவந்த நான் இனியேனும் கடவுளை த்யானித்து நல்வழி அடையவேண்டும். நான் வனம் சென்று தவம்புரிய விரும்புகிறேன். தந்தையின் விருப்பத்தினை முடித்துவைப்பது மைந்தன் கடமை. ஆகையால் என்னைப் போலவே நீயும் நமது நாட்டைச் செவ்வையாய் ஆளுதல் வேண்டும். எனக்கு உதவியாய் இருந்துவந்த மந்த்ரிகள் உனக்குந் துணை நிற்பார்கள். மதியூஹிகளான மந்த்ரிகளின் ஆலோசனையைக் கேட்டு மநு முறை தவறாமல் அரசுபுரிவதே செங்கோன்மையாகும். குடிகளின் குறைகளை அறிந்து அவர்களுக்கு நலம்புரிவது மன்னவன் கடமை. அவர்களைச் சார்ந்த இன்பமும் துன்பமும் அரசனைச்சேரும். ஆகையால் குடிகளுக்கு ஒருவிதத்திலும் குறை நேராதபடி ஆதரிப்பது வேந்தன் பொறுப்பு. தெய்வத்திற்கு அஞ்சி நீ செங்கோல் செலுத்திவந்தால் புகழும் பெருமையும் அடைவாய். ஏழைகளையும், திக்கற்றவர்களையும், ப்ராமணர்களையும், ஸ்திரீகளையும், பசுக்களையும் கைவிடாதே. உயிர் போவதாயிருந்தாலும் நன்னெறியினின்றும் விலகாதே. என் குலக்கொழுந்தே, நான் உனக்கு ஒன்றுங் கூறவேண்டியதில்லை. உன் நிறைந்த குணத்தையும் அறிவையும் திறத்தையும் பெரியோர்புகழக் கேட்டிருக்கிறேன். நீயும் அரசுரிமை வஹிக்கும் பருவம் அடைந்திருக்கிறாய். அந்தந்தக் காலங்களில் செய்ய வேண்டிய கடமைகளைக் கைவிடுதல் முறையன்று'

என்று பலவகையாக உபதேசித்துத் தன் கருத்தை வெளியிட்டான்.

அரசன் கூறிய உரைகளைக் கேட்டுப் புத்ரன் அதிக வருத்தத்தை யடைந்தான். அவன் தன் பிதாவை நோக்கி, "தந்தையே, நீங்கள் கூறியதைக் கேட்டு என் மனம் பதறுகிறது. புலியிருந்து ஆண்ட காட்டினை நரி ஆள்வதோ? நான் எங்ஙனம் இவ் அரசை வஹிப்பது? பெரிய ராஜ்யத்தைக் கட்டி யாள்வது எளிதோ? அறியாமையை யுடைய நானோ இப் பெருஞ் சுமையைத் தாங்கவல்லவன்? அறிவு, ஆண்மை, மதிநலம், நடுநிலை முதலிய அருங் குணங் கள் வாய்ந்த தங்களைப்போன்ற பெரியவர்களுக்கே நீதி தவறாமல் அரசுபுரிவது அருமையாயிற்றே! அப் படியிருக்க எளியேனாகிய நானோ அத்திறமை வாய்ந் தவன்? அன்றியும் தங்களைவிட்டுப் பிரிந்திருக்க என் னால் கூடுமோ? தங்கள் பிரிவினை இந்நாட்டுக் குடிகள் எப்படித் தரிப்பர்? நாட்டில் அராஜரிகமும் கொடுங் கோன்மையும் அன்றோ தலையெடுத்து நிற்கும்? ஆகை யால் தாங்கள் இன்னுஞ் சிலகாலம் நாட்டைவிட்டு அகலாதிருக்க வேண்டுகிறேன்" என்று குறையிரந்து நின்றான்.

அரசனது க்ஷேமத்தில் நாட்டம் மிகுதியும் உடைய அமைச்சர்கள் குலசேகரனைத்தேற்றி, அவனை நோக்கி, "இளவரசே, தந்தையார் கூறியது அனைத்தும் அநு பவத்தை ஒட்டியதே யாகும். உமது பெருமையை நீர் அறியமாட்டீர். எவ்விதத்திலும் நீர் உமது தந் தைக்குக் குறைந்தவர் அல்லர். அவருடைய ஆட்சி யின் கீழ் ஸுகமாய் வாழ்ந்திருந்த குடிகள் நீர் அரசு

செலுத்துவதைப்பார்க்க ஆவலுடையவராய் இருக்கின்றார்கள். உமது தந்தையும் உமக்கு மகுடாபிஷேகஞ் செய்து களிப்படைய விரும்புகின்றனர். மறுமைக்கு ஸாதனமான முயற்சிகளை இம்மையிலேயே தேடிக்கொள்ள வேண்டும் என்று அறநூல்கள் கூறுகின்றன. இதுவரை மஹாராஜன் உலக விஷயங்களிலேயே கருத்தைச் செலுத்தவேண்டியதா யிருந்தது. இனி அவருக்கு ஒரு குறையுமில்லை. அவர் இழைத்த நோன்புகள் பலித்தன. பெறுதற் கருமையான குணவானை மகனைப் பெற்றார். தாம் இதுவரை வஹித்துவந்த பாரத்தை பிள்ளையின்பேரில் இறக்கி முக்திக்கு ஹேதுவாகிய வழிகளில் மனத்தைச் செலுத்துதலே நேர். நாங்களும் உமக்குத் துணையாய் இருந்து மன மொழி மெய்களால் தொண்டு புரிகின்றோம். நீர் சிறிதும் மனச்சோர்வு அடையவேண்டாம். பிதாவின் இஷ்டத்திற்கு இணங்குவதே சரியாகும்' என்று கூறித் தமது கருத்தையும் வெளியிட்டனர்.

த்ருடவ்ரதனும் மீண்டும் தன் மகனுக்கு அறிவுறுத்தி மந்த்ரிகளுக்கும் ஹிதமொழி கூறினான். பின் அந் நாட்டிலுள்ள குடிகள் யாவரும் ராஜபுத்ரன் முடிபுனைந்து அரசுபுரியத் தொடங்கும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அரசனும் தக்க பண்டிதரைக்கொண்டு நல்ல நாளொன்று பார்த்து நகர்முழுதும் அலங்கரிக்கும்படி திட்டஞ்செய்தான். புத்ரனுடைய பட்டாபிஷேகத்திற்கு வரும்படி திருமுகங்கள் அனுப்பப்பட்டன. அவ்விழாவைக் கண்டு களிக்க எண்ணிறந்த மாந்தர் பல நாடுகளிலுமிருந்து வந்து கூடினார்கள். பட்டாபிஷேக தினத்தில் குல

சேகரனுக்கு மறைவாணர் மந்த்ரமுழக்கத்துடன் பல் வகைத் தீர்த்தங்கொண்டு ஸ்நாநம் செய்வித்தார்கள். பின்னர் அவனை விலை உயர்ந்த பட்டாடைகளாலும் ஆபரணங்களாலும் அலங்கரிப்பித்தனர். வைதிகர் அவனுக்கு முறைப்படி மகுடம்சூட்டி ஆசீர்வதித் தனர். கூடியிருந்த அரசர்கள் ஆநந்தக்கடலில் மூழ் கிக் களித்தனர். த்ருடவ்ரதராஜன் அடைந்த ஸந் தோஷத்திற்கு அளவேயில்லை. இந்தச் சுபதினத்தைக் கொண்டாடாதவர் கிடையாது. நகர் முழுவதும் களிப்பு மேலிட்டிருந்தது. அரசர் தத்தமக்குரிய மர்யாதைகளைப் பெற்றனர். அந்தணர் பெற்ற தானங்களுக்குக் கணக்கில்லை. நாட்டிலிருந்த ஸமஸ்த ஜனங்களும் விருந்துண்டு அரசனை வாழ்த்தினர். ஆல யங்களில் திருவிழாக்கள் சிறப்புடன் நடைபெற்றன. அஷ்டமங்கலங்களுடனும் குலசேகரனைப் பட்டத்து யானைமீதேற்றி ஊர்வலம் வந்தார்கள். பட்டாபி ஷேகச் சடங்குகள் முடிந்தபின், அன்றுமுதல் குலசே கரனே நாட்டரசுரிமை வஹிப்பான் என்று பறையறை வித்தனர்.

தன் புதல்வன் செங்கோல் செலுத்துவதைக் காணத் தந்தை மகிழ்ந்து சிலதினங்கள் சென்றபின் தன் மகனிடமும் மந்த்ரிமாரிடமும் விடைபெற்றுக் கொண்டு வநத்திற்குத் தவம்புரியச் சென்றான். அவன் சென்றபின் குலசேகரன் தந்தையின் பிரி விற்கு மிகவும் இரங்கினான். அமைச்சர் அவனைத் தேற்றக் குலசேகரர் ஒருவாறு தம் வருத்தம் நீங்கி அரசாட்சிபுரியத் தொடங்கினார். அவரது ஆட்சியின் கீழ்நாடுமுழுவதும் க்ஷேமமே தழைத்திருந்தது. சத்

ருக்கள் காலெடுத்துவைக்கவும் அஞ்சியிருந்தார்கள். இங்ஙனம் முடிதரித்த சில வருஷங்களுக் கப்பால் குல சேகர மஹாராஜன் ஓர் அழகியைத் தேடிக் கடிமணம் புரிந்துகொண்டார். அவர் தம் மனைவியுடன் எல்லா ஸுகங்களையும் அநுபவித்து வந்தார். நாளடைவில் அவர்களுக்கு ஒரு பெண்ணும் பிள்ளையும் பிறந்தனர். பிராட்டியே அரசனுக்குப் புதல்வியாய்ப் பிறந்தனள். குலசேகரர் அப் பெண்ணுக்கு இளை யென்றும், புத்ர னுக்கு த்ருடவ்ரதன் என்றும் பேரிட்டு வெகு சிறப் புடன் சீராட்டி வளர்த்து வந்தார்.

## 3. ஆழ்வாரின் விரக்திநிலை

இங்ஙனம் குலசேகரர் சத்ருக்களின் பயங் கொஞ்சமு மில்லாமல் செங்கோல் செலுத்திவருகை யில் பரமபதத்தில் நித்யஸூரிகளுடன் நித்யவாஸம் பண்ணியருளும் பரந்தாமன், மன்னனைத் தம் அடியவ ராக்கி அவருக்கு நற்பதம் அளிக்கத் திருவுளங் கொண்டான். மஹாவிஷ்ணுவின் க்ருபையை அரசன் பெற்றிருந்தார். அதனால் அவருக்குப் பகவானிடத் தில் முதிர்ந்த பக்தி ஏற்பட்டுவிட்டது. அவர் தம் நாட்டிலுள்ள வித்வான்கள் எல்லாரையும் வர வழைத்து ஒரு பெரிய ஸபையைக் கூட்டினார். அந்த ஸபையில் கூடிய பண்டிதர்கள் முதற்கடவுள் யார் என்று ஆராய்ந்து, முடிவில் திருமகள் நாயகனே எல்லாத் தெய்வங்களினும் முதன்மையானவர் என்று நிச்சயித்தார்கள். அதுமுதல் அரசரும் ராஜபோகங் களை வெறுத்தார். தாம் அநுபவித்த செல்வம் நற்கதி யடைதற்குப் பெரிய தடையென்று உணர்ந்தார். அரசபோகம் நிலையில்லாதது. கடவுளொருவரே அழிவில்லாத பெருஞ் செல்வம். ஆகையால் மஹா

விஷ்ணுவின் திருவடிகளை எப்போதும் த்யானித்து வந்தால் நல்லகதி யடைய வழியுண்டு. அதனால் அவர் ஸ்ரீரங்கநாதனையும் மற்றைய திருப்பதிகளில் எழுந் தருளி யிருக்கும் எம்பெருமான்களையும் ஸேவிக்க விருப்பங்கொண்டார். அவர் ஸ்ரீ ராமபிரானையும் ஸ்ரீ ராஜகோபாலனையும் தமது திருமாளிகையில் விக்ரஹ மாக ஆராதித்துவந்தார். அவர் விஷ்ணு பக்தர்க ளிடம் மிகவும் அன்பு பாராட்டிவந்தார். அவர்களுக்கு வேண்டிய த்ரவ்யம் அளித்து அவர்களை ஆதரித்துக் காப்பாற்றிவந்தார். அவர் மஹா பக்திமானுகையால் திருமாலை ஸம்ஸ்க்ருதத்தில் 'முகுந்தமாலை' என்னும் பாக்களைப் பாடித் துதித்தார். அந்த நூல் பகவா னுடைய மஹிமையை அழகாய் விவரிக்கிறது. அது பக்திரஸம் நிறைந்து கேட்போர் மனம் உருகும் வகையில் அமைந்துள்ளது. முகுந்தமாலையைத் தினந்தோறும் படுக்கையை விட்டு எழுந்ததும் பாரா யணம் செய்தால் நாம் கருதியதெல்லாம் கைகூடும் படி பகவான் அருள்புரிவார். அரசனுய்ப் பிறந் திருந்தும் குலசேகரர் பெரிய கல்விமானுகவும் பக்தனு கவும் விளங்கினுர். அதனுல்தான் அவர் உலகத்திற் குப் பக்திமார்க்கத்தைப் போதித்துப் பெருமை யடைந்த ஆழ்வார்களுள் ஒருவராய்ச் சிறப்படைந் தார்.

## 4. ராமாயண ஈடுபாடு

குலசேகரர் தமக்கு ஒழிந்த நேரங்களில் சிறந்த வித்வான்களை வரவழைத்து அவர்களிட மிருந்து ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய மஹா கதைகளைக் கேட்டு ஆநந்த மடைவார். ஸ்ரீராம னுடைய சரித்ரத்தைக் கேட்பதென்றுல் அவருக்குப்

ப்ரியம் அதிகம். வழக்கம்போல் ஒருநாள் ராமாயண காலக்ஷேபம் நடந்தது. கதை சொல்பவர் ராமன் ஸீதையுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் காட்டில் வாழ்ந்ததைப்பற்றிச் சொன்னார். 'ராமன் சூர்ப்பநகை யென்னும் கொடிய அரக்கியின் மூக்கை யறுத்துத் துரத்தி விட்டார். அவள் உடனே கரன், தூஷணன் முதலிய கொடிய ராக்ஷஸர்களிடம் சென்று தனக்கு ராமன் செய்த அவமானத்தைச் சொல்லி முறையிட்டாள். அவர்கள் உடனே வெகு கோபங்கொண்டு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு ராமபிரானை எதிர்க்க வந்துவிட்டார்கள். என்னசெய்வார் ராமர்! தம் மனைவி ஸீதையைத் தனித்துப் பர்ணசாலையில் விட்டு வைப்பது சரி என்று எண்ணினார். ஆகையால் தம் தம்பியாரை அவளுக்குக் காவலாக வைத்துவிட்டுத் தாம் ஒருவர் மட்டும் தம்மை எதிர்க்கவந்த அரக்கருடன் சண்டையிடச் சென்றார்' என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் குலசேகருடைய மனம் துடித்தது. ஸ்ரீ ராமபிரான் அப்போதுதான் அரக்கரோடு சண்டையிடச் சென்றதாக நினைத்தார். தனித்துச் சென்ற ராமபிரானுக்கு அரக்கரால் என்ன கேடுவிளையுமோ என்று நடுங்கினார். அவருக்கு ராக்ஷஸர்பேரில் அஸாத்யமான கோபம் ஜனித்தது. அவருக்கிருந்த ராமபக்திக்கு அளவேயில்லை. அதனால் ராமாயணம் பல வர்ஷங்களுக்கு முன் நடந்ததென்பதையும் மறந்துவிட்டார். அவர் தன் ஸேனைகளுடன் புறப்பட்டு ராமபிரானுக்கு உதவிபுரிய நிச்சயித்தார். உடனே அவர் தம் மந்த்ரிகளைக் கூப்

பிட்டுத் தமது ஸைந்யங்களைத் திரட்டி யுத்தத்திற்குத் தயாராகும்படி கட்டளையிட்டார். மந்த்ரிகள் அரசருடைய நிலையைக் கண்டு திகிலும் அச்சமும் ஏக்கமும் அடைந்தார்கள். தமது அரசருக்குப் பைத்யம் பிடித்துவிடுமோ என்ற கலக்கம் ஏற்பட்டுவிட்டது. அவரது தீர்மானத்தை எப்படி நிறுத்துவ தென்று அவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தார்கள். முடிவில் அவர்கள் ஓர் உபாயத்தால் குலசேகரருடைய மனத்தை மாற்றிவிட்டார்கள்.

அவர்கள் செய்த சூழ்ச்சியின்படி சிலர் மன்னவர்க் கெதிரே வந்து நமஸ்கரித்து நின்றார்கள். குலசேகரரும் செய்தி யென்னவென்று வினவினார். அவர்கள் மன்னவனை நோக்கி, "ஸ்ரீ ராமபிரான் கரதூஷணதியரோடு தைர்யமாய்த் தாம் ஒருவராய் யுத்தம் செய்து அவர்களை முறியடித்து வெற்றியோடு திரும்பிவிட்டார். அவர் பர்ணசாலைக்கு ஜயசீலராய்த் திரும்பியதும், ஸீதாதேவியார் அவருக்கு உபசாரம் செய்து தேற்றினார். அவருக்கு இனி சத்ருக்களின் பயமில்லை" யென்று கூறினார்கள். அதைக் கேட்ட ஆழ்வாரும் களிப்படைந்தார். தாம் தீர்மானித் திருந்த ப்ரயாணத்தையும் நிறுத்தினார்

அதுமுதல் ராமாயணஞ் சொல்பவர் ராமபிரான் வெற்றியோடு புரிந்த செயல்களை மட்டும் விரித்துக் கூறுவார். அவ ரடைந்த துன்பங்களைப் பற்றிக் கூறும்போது சுருக்கிக் கூறிவந்தனர். அதனால் ஆழ்வாருடைய மனமும் கலக்கமற் றிருந்தது. ராஜ கார்யங்களும் செவ்வனே நடைபெற்றன. ஒருநாள் வழக்கமாய் ப்ரஸங்கம் செய்பவர் வெளியூருக்குப்

போகவேண்டி யிருந்தது. அதனால் ராமாயண ப்ரஸங்கம் செய்வதற்கு அவர் தம் குமாரரை அரண்மனைக்கு அனுப்பியிருந்தார். குமாரரோ ஆழ்வாரின் ராம பக்தியின் சிறப்பை அறியாதவர். பிதாவும், ப்ரஸங்கம்நடத்தும் விதத்தைப்பற்றி ஒன்றுஞ்சொல்ல வில்லை. ஆகையால் அவர் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தி லுள்ளதை மொழி பெயர்த்து ப்ரஸங்கிக்கத் தொடங்கினார். அன்றையதினம் ராவணன் ஸந்யாஸி வேஷம்பூண்டு ராமபிரா னில்லாத ஸமயத்தில் பர்ண சாலைக்கு வந்து ஸீதையை மாயமாய் ஏமாற்றித் தூக்கிச் சென்ற விஷயத்தைப்பற்றிப் புதியவர் ப்ரஸங்கிக்கத் தொடங்கித் தம் கதையை வளர்த்தி ஸீதைக்கு நேர்ந்த ஆபத்தை விரித்துரைக்கலானார். ஆழ்வார் இக் கதையைக் கேட்டதும் சீறி எழுந்தார். அவருக்கு உண்டான கோபத்துக் களவே யில்லை. அவர், "இந்த அரக்கனை நான் சும்மாவிடுவதில்லை. இப்போதே புறப்பட்டுக் கடலைக் கடந்து அரக்கரெல்லோரையும் போரில் தொலைத்துவிட்டுத் திரும்புவேன். பிராட்டியைக் கவர்ந்தவனைக் கொல்லாமல் விடுவதில்லை. ஸீதையை மீட்டு ஸ்ரீராமபிரானிடம் சேர்க்கும் வரையில் என் மனத்திற்கு அமைதி உண்டாகாது" என்று சொல்லி வாளுங் கையுமாய்ப் புறப்பட்டார். தம் ஸேனைகளைத் திரட்டிக்கொண்டு லங்கையை நோக்கி ப்ரயாணமானார். ராமபிரானுக்கு ஸஹாயம் செய்யும் பாக்யம் பெற்றதற்காக அவர் மன மகிழ்ந்தார். அப்போது அவருக்குண்டான ஊக்கத்திற்கும் கிளர்ச்சிக்கும் அளவே யில்லை. இவருடைய மனவுறுதியைக் கண்டு தேவர்க ளுட்பட யாவரும் என்ன நேரிடுமோ என்று அச்சங் கொண்டனர்.

ஆழ்வார் கடற்கரையை அடைந்ததும் அதனை நீந்திக்கடந்து லங்காபுரிக்குச் செல்லத் தீர்மானித்தார். அவர் தைர்யத்தோடு ஜலத்தில் இறங்கிவிட்டார். அங்கிருந்த ஜனங்களுக்கு அவரைத் தடுக்குந் துணிவு பிறக்கவில்லை. ஆழ்வார் கழுத்தளவினதான நீரில் இறங்கி மேலும் செல்லத் துணிந்தார் .என்ன அநர்த்தம் விளையுமோ என்று யாவரும் பயந்தனர். ஆழ்வாருடைய பக்தியைக் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். அவருடைய பக்தியைக்கண்டு ராமபிரானும் அவரைக் காக்கத் திருவுளங்கொண்டார். ஆபத்துக் காலத்தில் தம் பக்தர்களுக்கு அருள் புரிவதிலேயே கருத்துடைய ராமபிரான் ஸீதாதேவியோடும், தம்பி லக்ஷ்மணரோடும் ஆழ்வாரின் எதிரில்வந்து தோன்றிக் காட்சி கொடுத்தார். தாம் ராவணனையும் மற்றும் அவனைச் சேர்ந்த அரக்கர் அனைவரையும் கொன்று ஸீதையை மீட்டு வெற்றி பெற்ற விவரத்தை எடுத்துரைத்து ஆழ்வாரை ஸாந்தப்படுத்தினர். ராமபிரானது ஸுகங்களையும் துக்கங்களையும் தம்முடையனவாகப் பாவித்த ஆழ்வாரைக் கரை யேற்றி உடனே அவ்விடத்தினின்றும் தாசரதி மறைந்து விட்டனர். இவ்வதிசயத்தைக் கண்ட தேவர்கள் ஆழ்வாரை வணங்கி மலரை ஆகாயத்தினின்றும் சொரிந்தனர். மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவரான ராமபிரானுடைய ஸுக துக்கங்களில் குலசேகரர் மிகவும் ஈடுபட் டிருந்தார். அதனால் ஆழ்வாருக்குப் 'பெருமாள்' என்று ஒரு பெயர் நிலைத்தது.

## 5. பாகவத பக்தி

குலசேகரர் தம் நகர் நோக்கித் திரும்பியபின் முன்போல் நாட்டைப் பரிபாலநஞ் செய்யும் விஷ

யத்தில் தமது மனத்தைச் செலுத்துவதில்லை. ஸ்ரீ ரங்க க்ஷேத்ரத்தில் ரங்கநாதன் எழுந்தருளி யிருக்கும் சிறப்பைச் சில வைஷ்ணவர்கள் ஆழ்வாருக்குக் கூறினார்கள். அந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டதும் அவரது மனம் கரைந்து உருகியது. அப் பெருமானைச் சென்று ஸேவிக்கவேண்டு மென்னும் ஆவல் அதிகரித்தது. உடனே தம் மந்த்ரிகளை நோக்கி, "அமைச்சர்களே, நான் திருவரங்கம் சென்று ஸ்ரீ ரங்கநாதனை ஸேவித்துவர விரும்புகிறேன். நான் போய்த் திரும்பும்வரையில் நாட்டைச் செவ்வையாய் ஆட்சி புரிந்து வாருங்கள்" என்று சொல்லித் தம் பரிவாரங்களுடன் ப்ரயாணப்பட்டார். அமைச்சர்கள் அரசரை எவ்வளவோ வேண்டியும் அவர் கொண்ட எண்ணத்தை இவர்களால் மாற்ற முடியவில்லை. 'அவர் மனம் செல்லும் வழியே அவரைச் செல்ல விட்டுவிட்டால் அவர் ராஜ்யத்தைப் பற்றிக் கவனிக்கவே மாட்டார். அதனால் அராஜரிகம் ஏற்படும். அது நாட்டுக்குப் பல தீமைகளை விளைக்கும். ஆதலால், அதற்கு இடங் கொடுக்கலாகாது' என்று மந்த்ரிகள் பலவிதமாய் யோசனைசெய்து பின்பு ஒரு முடிவிற்கு வந்தார்கள்.

அவர்கள் சில பாகவதரை ஆழ்வாரிடம் அனுப்பினார்கள். அவர்கள் அரசனை அடைந்து, "மன்னரே, உம்முடைய இஷ்டத்திற்கு விரோதமாக நடக்க நாங்கள் கனவிலும் எண்ணமாட்டோம். உங்களுக்கு சாஸ்த்ர வுண்மையை யெடுத்துக் காண்பிக்கவே இங்கு வந்தோம். ஆகையால் நீர் எங்களைப்பற்றி வேறுவிதமாய் நினைக்கவேண்டாம். அவரவர்க்குள்ள

கடமைகளைச் சரியாய்ச் செய்யவேண்டுமென்று வேதங்கள் கூறுகின்றன. நீரோ அரசர். அநேக கோடி ஜனங்களைக் காத்து அவர்களின் க்ஷேமத்திற்குப் பாடுபடும்படி கடவுள் அரசர்க்குக் கட்டளையிட் டிருக்கிறார். அக்கடமையி லிருந்து தாங்கள் தவறலாகாது. அரச னில்லாத நாடும், தாமரையில்லாப் பொய்கையும், புருஷனில்லாத பெண்களும் பெருமையடைய முடியாது. ஒருவர்க்குரிய தொழிலை வேறொருவர் செய்வது கஷ்டம். மந்த்ரிகள் அரசர்க்கு ஆலோசனை சொல்வதற்கு மட்டும் உபயோகப்படுவோர். அவர்கள் ஆட்சிக்கு உரியவர் அல்லர். அது நாட்டில் கலஹங்களுக்கும் பலவகைத் தீமைகளுக்குமே காரணமாகும். ஆயினும் உங்களுக்குத் தெய்வபக்தி கூடாதென்பது எம் கருத்தன்று. இருந்தவிடத்தில் ஸ்ரீரங்கநாதனை த்யானித்து நற்கதியடைதலே நன்று. அன்றியும் திருமாலைப் பூஜிப்பதால் உண்டாகும் பலனைப்போல் ஆயிரமடங் கதிகமான பலனைத் திருமா லடியார்களைப் பூஜிப்பதால் ஒருவன் பெறக்கூடும். ஆகையால் நீர் கொண்டிருக்கும் எண்ணத்தை மாற்றி அடியவர்களை ஆராதித்துவந்தால் அதுவே சிறந்த புண்யமாகும்'' என்று கூறி ஆழ்வாரைத் தேற்றினார்கள். குலசேகரரும் வைஷ்ணவர்கள் கூறுவது உண்மையே என்று தெளிந்தார். அவர் ஸ்ரீரங்கஞ் செல்லவேண்டுமென்னு மெண்ணத்தை விட்டு விட்டு அதுமுதல் பாகவதர்களைத் திரட்டி அவர்களை ஆராதித்து உபசரித்தலையே மேலாகக் கொண்டார். பாகவதர்களை அன்புடன் உபசரித்து அவரிடமிருந்து சாஸ்த்ர வுண்மைகளைக் கேட்டறிந்து மகா பக்திமானாய் விளங்கினார். அவருக்குச் சிற்சில ஸமயங்களில் ஸ்ரீரங்கஞ் செல்லவேண்டு

மென்ற எண்ணந் தோன்றும். அச்சமயத்தில் மந்த்ரிகள் சில வைஷ்ணவர்களை அவரிடம் அனுப்புவார்கள். உடனே அவரது மனம் திரும்பிவிடும்.

## 6. அமைச்சரின் சூழ்ச்சி

குலசேகரருக்கு இருந்த பாகவதபக்தியைக் கேள்வியுற்றுப் பல நாடுகளிலிருந்தும் ஸ்ரீவைஷ்ணவர்கள் சேரநாடுவந்து சேர்ந்தனர். அவர்கள் அரசனது மர்யாதைகளையும் ஸந்மானங்களையும் பெற்று க்ஷேமமாய் வாழ்ந்து வந்தார்கள். அரசனது அபிமானத்தைப் பெற்றிருந்தமையால் அவர்களுக்கு ஒரு குறையுமில்லை. நாளடைவில் அந்நாடு முழுவதும் ஸ்ரீவைஷ்ணவர்கள் மலிந்து கிடந்தனர். இவர்களுக்கு அரசன் செய்துவந்த சிறப்புக்களைக் கண்ட அரண்மனை உத்யோகஸ்தரிற் சிலர் அழுக்காறடைந்தனர். பாகவதர்களின் பெருமையையும் செல்வாக்கையும் எப்படித் தொலைப்பதென்று யோசித்தார்கள். பொறுமை நாளுக்குநாள் வ்ருத்தியடைந்துகொண்டே வந்தது. பணமென்னும் பேய் அத் தீயோரைப் பிடித்து ஆட்டத் தொடங்கிற்று. அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களை அடியோடு ஒழிப்பதற்கு வகை தேடிக் கொண் டிருந்தார்கள். அரசனுக்குத் தெரியாமல் அவர்கள் பாகவதர்களைத் தூஷித்தும் கடுமையாக நடத்தியும் வந்தார்கள். முடிவில் அவ் வுத்யோகஸ்தர்கள், அவர்களுடைய ஹிம்ஸைகளைப் பொறுமையோடு ஸஹித்துக்கொண்டிருந்த அடியவரின்மீது அபாண்டமான பழியொன்றைச் சுமத்தி அரசரைக் கொண்டே அவரை நாட்டினின்றும் துரத்திவிடத் தீர்மானித்தார்கள்.

குலசேகரர் ராமபிரானிடத்தில் பக்தி மிகுந்தவர். அவர் ஸ்ரீராமர்க்குத் தினந்தோறும் பூஜை செய்வித்து வருவார். ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை அவர் வெகு சிறப்போடும் பாகவதர்களைக் கொண்டு நடத்தி வந்தார். ஸ்ரீராமநவமி தினத்தன்று உத்ஸவத்தின் சிறப்பை இத்தன்மையதென்று சொல்லி முடியாது. பல்லாயிரக் கணக்கான ப்ராமணர்கள் வந்து கூடினார்கள். அவர்களிடம் பகைமைகொண் டிருந்த மந்த்ரிகள் அவர்களுக்குத் தீங்குபுரிய அத்தினமே ஏற்ற தினம் என்று கொண்டனர். பெருமாளின் திருவாபரணங்கள் வைக்கப்பட் டிருந்த பெட்டியினின்றும் ஒரு விலையுயர்ந்த நவரத்ன ஹாரத்தை மந்த்ரிகள் அரசனுக்குத் தெரியாமல் எடுத்து ஒளித்து வைத்து விட்டார்கள். திருமஞ்ஜன காலத்தில் ப்ராமணர்கள் நகையைப் பெட்டியிற் காணாமல் நடுங்கினார்கள். அவர்கள் பயத்தோடுஞ் சென்று அரசனைக் கண்டு வணக்கமாய் நகை களவுபோன விஷயத்தை அறிவித்தார்கள். அதைக்கேட்ட அரசர் கலங்கி மந்த்ரிகளை விசாரித்தார். மந்த்ரிகள் தைர்யமாய் முன்வந்து, "திருவாபரணப் பெட்டியைத் தினந்தோறும் திறப்பவர் இப் பாகவதர்களே. ஆகையால் அதைப்பற்றிய விஷயம் அவர்களுக்குத் தெரியுமேயன்றி வேறெவர்க்குந் தெரியாது. நகையை அவர்களே களவாடி யிருக்கவேண்டும். அது அவர்களை விட்டு வேறெங்கும் போவதற்கு வழியில்லை. அளவுக்குமீறி அவர்களுக் கிடங்கொடுத்ததால் இக் களவு நடந்தது. அவர்களைப் பிடித்துத் தண்டித்தால் களவு தானே வெளிவரும். இல்லாவிட்டால் புலனொன்றும் ஏற்படாது. இப் பாபிகள் பாகவதர்

போல் வேஷம் பூண்டு நடித்துவந்து ஸமயம் நேர்ந்த போது இக் கார்யத்தைச் செய்யத் துணிந்தார்கள். சிறிதும் தயை காட்டாது நெருக்கிக் கண்டித்தே இவர்களிட மிருந்து நகையைப் பெறவேண்டும். வேறு வழியில்லை" என்று கூசாமல் மொழிந்தனர்.

## 7. பாம்புக் குடத்திற் கையிட்டுப் பாகவதர் மஹிமையை அறிவித்தல்

இம் மொழிகளைக் கேட்டுக் குலசேகர மன்னன் மிகவுங் கோபங்கொண்டார். அவர் கண்கள் சிவந் தன. அவர் தம் மந்த்ரிகளை வெகுண்டு நோக்கி, "மந்த்ரிகளே, உங்கள் பேதைமையை என்னென்று சொல்வது! களவைக் கண்டுபிடித்துக் குற்றவாளி யைத் தண்டிக்கும் வகையை ஆராயாமல் பழி ஒருபக்கம் பாபம் ஒருபக்கம் என்பதுபோல் இக் குற்றத்தை பாகவதர்களின்மீது சுமத்தினீர்கள். எனக்கு இப்படிப்பட்ட ஆலோசனை சொல்லிப் புத்தி புகட்டவோ நீங்கள் ஏற்பட்டீர்கள்? உங்களைத் துணை யாகக் கொண்டு நான் புரிந்துவரும் செங்கோன்மை நன்று! நன்று! கொலைத்தொழில் பாபமென் றஞ் சியே நான் உமது நாவைத் துணியாது இதுகாறும் பொறுமையுடன் இருந்தேன். இதோ பாருங்கள்; நான் இப் பாகவதர்கள் நிரபராதிகளென்று உங்கள் ஸந்தேஹம் தெளியும்படி காட்டுகிறேன். அவர்கள் ஒரு பாபமு மறியாத உத்தமர்களென்று நான் ஸத்யம் பண்ணுகிறேன்" என்று சொல்லி கொடிய விஷநாக மொன்றைப் பிடித்து ஒரு குடத்திலிட்டு அதைக் கொணரும்படி கட்டளையிட்டார்.

அரசனது ஆணையைக்கடக்க அஞ்சி மந்த்ரிகளும் நடுக்கத்தோடுஞ் சென்று ஒரு வேடனைக்கொண்டு



குலசேகரர் பாம்புக் குடத்தில் கையிடப்போதல்

பாம்பைப் பிடித்துக் குடத்திலிட்டு ஸபையில் கொண்டுவந்து வைத்தார்கள். அரசர் அங்குக் கூடியிருந்த அமைச்சர் முதலியோரை நோக்கி, "இதோ நான் இவர்கள் நிரபராதிகளென்று ஸத்யம் பண்ணுகிறேன். நான் சொல்வது மெய்யோ பொய்யோ என்பதை நீங்கள் அறிய விரும்புவீராயின் இதோ இருக்கும் பாம்புக் குடத்தைத் திறந்து அதில் என் கையை நுழைப்பேன். நான் கூறுவது நிஜமாயின் இப் பாம்பு என்னைத் தீண்டிக் கொல்லாது. நான் சொல்வதுபோலன்றி இப்பாகவதரே இக் களவிற்குக் காரணமாயிருக்கும் பக்ஷத்தில் அது விஷத்தைக்கக்கி என் உயிரைக் கவரும்" என்று சொல்லி அக் குடத்தில் கையிட்டார். அப்போது அங்குக் கூடியிருந்தவர்க்கிருந்த பயத்தை இவ்வளவென்று சொல்ல முடியுமா? ஸத்யத்திற்குக் கட்டுப்பட்ட அரவம் ஆழ்வாருக்கு ஒரு தீங்கும் விளைக்காது அவர் கூறியது உண்மையே என்று அங்கிருந்த யாவர்க்கும் தெளிவாய்க் காட்டியது. இவ் வதிசயத்தைக் கண்ட மந்த்ரிகள் வெட்கித் தலை குனிந்தார்கள். அவர்கள் தாம் ஆராயாது செய்த பிழைக்காக இரங்கி வருத்த முற்றார்கள். அவர்கள் உடல் நடுக்கத்துடன் ஓடோடியுஞ் சென்று தாங்கள் திருடி ஒளித்துவைத்திருந்த நகையைக் கொண்டுவந்து மன்னனிடம் சேர்ப்பித்தனர். அவரது திருவடிகளில் விழுந்து பணிந்து, "அரசே, தங்களுடைய மஹிமையைச் சிறிதும் அறியாது எங்கள் மடமையால் இக் கொடுந் தொழிலைப் புரிந்து பழியைப் பார்ப்பனர்மீது சுமத்தினோம். நாங்கள் இப் பாபத்தினின்றும் உய்யும்வகை யாதென் றறியோம். என் செய்வோம்! எங்களைக் காத்துப் பொறுத் தரு

ளல்வேண்டும். எம்போலும் பாபியரும் உண்டோ? பாகவதர்களிடம் அபசாரப்பட்ட நாங்கள் தப்புவ தெப்படி? நாங்களே தண்டனைக்குள்ளாக வேண்டிய வர்கள். இப் பாகவதோத்தமர்கள் மஹா புண்ய வான்கள். ஒரு பாபமு மறியாத நற்குண சீலர்கள்” என்று தாம் பொறாமையால் செய்த களவை ஒப்புக் கொண்டார்கள்.

இவர் உரைகேட்ட மன்னவர் அவர்களுக்காக மிகவும் வருந்தினார். சான்றோர்க் கழகு பொறுமையே யன்றோ? ஆகையால் குலசேகரர் மந்த்ரிகளைக் கருணை யோடு நோக்கி, “பகவான் இப் பாகவதர் மூலமாய் உங்களுக்குப் புத்தி புகட்டினார். ஆகையால் நீங்கள் உங்கள் ஆயுள் உள்ளவரை அவர்களை வணங்கித் தொண்டுசெய்து அவர் க்ருபைபெற்று நற்கதியடைய முயலவேண்டும். நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ச் செய்தது, அவர்களின் பெருமையை முன்னிலும் மேன்மையாக நாடெங்கும் அறிவித்தது. இப்பாகவதர் களை உபாஸித்தே பகவானது அருளுக்குப் பாத்ரராக வேண்டும். ஆகையால் நீங்கள் இனிப் பாகவதாப சாரத்திற்கு அஞ்சி நற் கர்மங்களைச் செய்து பிழை யுங்கள்” என்று உபதேசித்தார். அவர்களும் அவர் மொழிப்படியே நடந்து நற்கதி யடைந்தார்கள்.

## 8. ஸ்தல யாத்ரையும் பரமபத ப்ராப்தியும்

இவ்விதம் ஆழ்வாருடைய பெருமையும் புகழும் நாடெங்கும் பரவி எங்கும் வைஷ்ணவமதமே தழைத் தோங்கிற்று. அவர் அரச ஸுகங்களைத் துறந்து ஈச்வர தர்சனஞ் செய்ய விரும்பினார். தமது மகனை த்ருட வ்ரதன் தோள்மீது பூபாரத்தை யிறக்கி, அவ

னுக்கு முடிசூட்டி நாட்டை அவனுக்களித்து ஆழ்வார் ஸ்ரீரங்கம்போய்ச் சேர்ந்தார். அங்கே அரவணையில் வீற்றிருக்கும் நம்பெருமாளை ஸேவித்து ஆநந்த மடைந்தார். அவர் தம் புத்ரியோடும் ஸ்ரீரங்கத்தில் வாஸஞ் செய்கையில் அப்பெண் விவாகபருவத்தை அடைந்தாள். அவள் ஸ்ரீ ரங்கநாதனைத் தவிர வேறெவரையும் மணம்புரிய விரும்பவில்லை. அவளது மனம் ஸ்ரீ ரங்கநாதனிடம் அழுந்திக் கிடந்தது. அவளது காதலை உணர்ந்த பெருமானும் அவளுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கினார். ஆழ்வார் அவளை அப் பெருமானுக்கு மணம் முடித்துக்கொடுக்க அவரும் க்ருபையோடும் அவளை அங்கீகரித் தருளினார். ஆழ்வாரும் ஸந்துஷ்டராய்ப் பெருமாளை ஸேவித்துக் கொண்டே அந்த ஸ்தலத்தில் சிலகாலம் வாஸஞ் செய்துகொண் டிருந்தார்.

பின்னர் ஆழ்வார் பகவான் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் திவ்யதேசங்களுக்கு யாத்ரைசெய்ய விரும்பினார். அவர் ஸ்ரீ ரங்கத்தி னின்றும் புறப்பட்டு, திருப்பதி, அயோத்தி, சித்ரகூடம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று அவ் விடங்களிலுள்ள எம் பெருமான்களை ஸேவித்து இன்பமடைந்தார். அவர் ஸம்ஸ்க்ருதத்தில், "முகுந்தமாலை" என்னும் ப்ரபந்தம் இயற்றியதுபோலவே, தமிழிலும் ஸ்ரீராமபிரானது மஹிமைகளைப் புகழ்ந்து அற்புதமான பாடல்களால், "பெருமாள் திருமொழி" என்னும் ஓர் அரிய நூலை இயற்றி உலகத்தார்க்கு நலம் புரிந்தார். முடிவில் அவர் ப்ரஹ்மதேசம் என்னும் நகரை அடைந்தார்.

அவ்விடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாளுக்கு வெகுகாலம் திருப்பணிகள் செய்து கொண்டிருந்து பின் பரமபதம் அடைந்தார். இவரைப்போல் நாமும் பக்தியும், பொறுமையும், ஆசையின்மையுங் கொண்டிருந்தால் மகாவிஷ்ணுவின் க்ருபையைப் பெற்று மேன்மை யடைதல் எளிதன்றோ?

Printed at the Caxton Press, Madras. — 1925 (A)

# பக்த சிரோமணிகள் சரித்திரச் சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| சங்கராசாரியார் | 0 | 4 | 0 |
| இராமானுஜர் | 0 | 1 | 0 |
| தாயுமானவர் | 0 | 1 | 0 |
| சம்பந்தர் | 0 | 2 | 0 |
| திருநாவுக்கரசர் | 0 | 1 | 0 |
| சுந்தரமூர்த்திகள் | 0 | 1 | 0 |
| மாணிக்கவாசகர் | 0 | 2 | 0 |
| நம்மாழ்வார் | 0 | 2 | 0 |
| திருமங்கை மன்னன் | 0 | 2 | 0 |
| குலசேகராழ்வார் | 0 | 2 | 0 |
| திருப்பாணாழ்வார் | (அச்சில்) | | |
| மதுரகவிகள் | ,, | | |
| தொண்டரடிப்பொடி ஆழ்வார் | ,, | | |
| நந்தனார் | 0 | 4 | 0 |
| திருவெண்காடர் | 0 | 4 | 0 |
| மார்க்கண்டேயர் | 0 | 2 | 6 |
| துருவ பிரஹ்லாதர் | (அச்சில்) | | |
| ஸ்ரீமந் நாதமுனிகள் | ,, | | |